## நடவடிக்கை 1

வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. விளம்பரங்கள் எத்துறையின் கருவியாக விளங்குகின்றன?

2. விளம்புதல் எனும் சொல்லின் பொருள் யாது?

3. விளம்பரங்களைத் தாங்கிச் செல்லும் சாதனங்கள் யாவை?

4. விளம்பரங்கள் மூலம் நிறுவனங்கள் எவ்வாறு பயனடைகின்றன?

5. விளம்பரங்களினால் நாடு பெறும் நன்மைகளைக் கூறுக.

6. நீ விளம்பரம் செய்ய விரும்பினால் எந்தத் தொடர்புச் சாதனத்தைத் தேர்வு செய்வாய்? ஏன்?

விளம்பரங்கள் மக்களிடம் பொருள்களின் அறிமுகத்தை விரைவில் கொண்டு சேர்ப்பதன்வழியும் வாங்கும் பொருள்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் நிறுவனங்கள் பயனடைகின்றன.

நான் விளம்பரம் செய்ய விரும்பினால் தொலைக்காட்சியைத் தேர்ந்தெடுப்பேன். காரணம், அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் கருவியாக தொலைக்காட்சி திகழ்கிறது.

விளம்பரங்கள் வியாபாரத் துறையின் கருவியாக விளங்குகின்றன.

விளம்பரங்களைத் தாங்கிச் செல்லும் சாதனங்கள் வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள், முகநூல் போன்றவை ஆகும்.

விளம்பரங்களினால் நாட்டின் பணபலம் வலுப்பட்டு அதன் பொருளாதாரம் மேம்படுகிறது.

விளம்புதல் என்பது திரும்பத் திரும்பச் சொல்லுதல் ஆகும்.

LIVEWORKSHEETS